பணியாளர் மற்றும் நிருவாகச்
சீர்திருத்தத் (கே) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.
ஆனி 3, திருவள்ளுவராண்டு, 2041.

கடித எண்.27879/கே1/2010–1, நாள் 17.06.2010

அனுப்புநர்
திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப.,
அரசு தலைமைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை–9,
அனைத்துத் துறைத் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

ஐயா,

பொருள்: பணியாளர் சங்கம் - தமிழ்நாடு தலைமைச்செயலக சங்கம் - கோவை மாநகரில் ஜுன் 23-27-ல் நடக்கும் உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அரசு பணியாளர்களுக்கு சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்கப்படுகிறது.

---

கோவை மாநகரில் ஜுன் 23 முதல் 27 வரை ஐந்து நாட்களுக்கு நடைபெறவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் கலந்து கொள்ள தங்களை அனுமதிக்க வேண்டுமென்று பல்வேறு அரசுப் பணியாளர் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

2. அந்த கோரிக்கைகளை அரசு கவனமுடன் பரிசீலித்து, மேற்படி மாநாட்டில் கலந்துகொள்ள விரும்பும் அரசு பணியாளர்களுக்கு சிறப்பு தற்செயல் விடுப்பு **(Special Casual Leave)** வழங்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

(கையொப்பம்) 17/06/2010
அரசு தலைமைச் செயலாளருக்காக.

17/6/10

நகல்
தமிழ் நாடு தலைமைச் செயலக சங்கம்,
தலைமைச் செயலகம், சென்னை–9